தினமணி

# விவசாயிகளின் நண்பன் "எ'மணி!

டி.வீ.ஆர்.சாமி

First Published : 10 Jun 2012 11:32:27 AM IST

மஞ்சூர், ஜூன் 9: மண்புழுவை விவசாயிகளின் நண்பன் என்பர். ஆனால் நீலகிரி மாவட்ட மலைகாய்கறி விவசாயிகளின் நண்பன் யாரென்றால் விவசாயிகள் பெருமையுடன் சுட்டிக்காட்டும் நபர்தான் எலி மணி.

÷கடனை வாங்கி கஷ்டப்பட்டு நிலத்தில் பயிர் செய்யும் விவசாயி, அதற்கு நீர்ப் பாய்ச்சி, உரமிட்டு வளர்த்தாலும் இயற்கையால் வஞ்சிக்கப்பட்டு மகசூல் இல்லாமல் போவதும், மகசூல் இருந்தாலும் வியாபாரிகளால் வஞ்சிக்கப்பட்டு உரிய விலை கிடைக்காமல் போவதும் வழக்கமாக நடப்பதுதான். இந்தப் பாதிப்பு குறித்து பயிர் பக்குவமடையும்போதுதான் விவசாயிகளுக்கு தெரியவரும்.

ஆனால், பாதி பருவத்திலேயே அதைக் கொள்ளையடித்து போவதுதான் எலிகளின் வேலை. சுண்டெலி, வெள்ளெலி, பெருச்சாளி என பல வகையான எலிகள் இருந்தாலும், மலைக்காய்கறி விவசாயத்தை அச்சுறுத்துவது பெருச்சாளிகள்தான்.

÷நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயத்துக்கு இணையாக முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், பீன்ஸ் உள்ளிட்ட மலைக்காய்கறி விவசாயம் செய்யப்படுகின்றன. குறுகிய காலப்பயிர் என்பதால் அதிகளவு மலைக்காய்கறிகளை பயிரிடுவதில் சிறு, குறு விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

÷உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட் உள்ளிட்ட பயிர்கள் பலனுக்கு வரும் நேரத்தில் திருட்டுத்தனமாக அறுவடை செய்து தன் தேவையைவிட பலமடங்கு விவசாயப் பயிர்களை தனது வலைக்குள் சேமித்து வைக்கும் பெருச்சாளிகளால் பெரும் இழப்பை சந்திக்கின்றனர் விவசாயிகள்.

÷விவசாயிகளின் மொத்த உற்பத்தியில் சுமார் 25 சதவீத விளைபொருள்களை பெரு ச்சாளிகள் தின்று அழிக்கின்றன. இந்தப் பெருச்சாளிகளிடமிருந்து விவசாயிகளை காப்பாற்றி வருபவர்தான் "எலி'மணி. உதகை அருகே உள்ள மஞ்சணக்கொரை பகுதி யை சேர்ந்த மணி, கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எலிகளை பிடிக்கும் தொழிலை செய்கிறார்.

அதனால் "எலி'மணி என்ற அடைமொழியால் அனைவராலும் அறியப்படுகிறார்.

÷ஆரம்பத்தில் தனது வீட்டில் எலிகளை பிடிப்பதற்காக கடைகளில் விற்கும் இடுக்கி, எலிப்பொறியை பயன்படுத்திய மணி, பொறியில் சிக்கும் பெருச்சாளிகள் அவற்றை இழுத்துக்கொண்டு சென்றுவிடுவதால், விஷம் வைத்துள்ளார். அதை உண்ணும் எலி கள் வீட்டில் எங்கேயாவது ஒரு மூலையில் இறந்துவிடுவதால், அவற்றை எடுக்கமுடி யாமல் வீடுமுழுவதும் துர்நாற்றம் வீசும். இதனால் எலிகளை பிடிக்க மணியே பிரத்யேகமாக சில பொறிகளை தயார் செய்து, அவற்றில் எலிகளை பிடித்துள்ளார். விளையாட்டாக அதை விவசாய நிலங்களிலும் வைத்து எலிகளை பிடித்துள்ளார்.

இந்தப் பொறியில் பெரிய அளவிலான பெருச்சாளிகளும் மாட்டிக் கொள்வதால் அக்கம் பக்கம் இருந்தவர்கள் தங்கள் தோட்டங்களிலும் எலி பிடிக்கச் சொல்லியுள்ளனர். ஆரம்பத்தில் எலி ஒன்றுக்கு 50 பைசா மட்டும் பெற்றுவந்த மணி தற்போது ஒரு எலியை பிடிக்க ரூ.80 கட்டணமாக வசூலிக்கிறார்.

÷முதல்நாள் மணியிடம் சொல்லிவிட்டால், தோட்டத்தில் எலி நடமாட்டம் அதிகமுள்ள இடங்களை கண்டறிந்து அந்த இடங்களில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பொறிகளை வைக்கிறார். மறுநாள் காலை அவற்றில் எத்தனை எலிகள் சிக்கியுள்ளதோ அதை தோட்ட உரிமையாளரிடம் காண்பித்து அதற்கான தொகையைப் பெற்றுக் கொள்கிறார். ஒருமுறை பொறிவைத்தால் குறைந்தது 10 எலிகள்முதல் அதிகபட்சமாக 30 எலிகள் வரை மணி பிடித்துவிடுகிறார். மலைக்காய்கறி விவசாயம் அதிகம் செய்யும் நஞ்சநாடு, கப்பத்தொரை, முத்தோரை, எம்.பாலாடா, சேப்ளாடா, மணியட்டி, கெப் வட்டி உள்ளிட்ட பகுதிகளில் எலிகளை பிடித்துள்ள மணி, கர்நாடகத்தின் சில பகுதிகளிலும் ஒப்பந்த முறையில் எலிகளைப் பிடித்து விவசாயிகளுக்கும் உதவி செய்கிறார்.

சாதாரண பொறிவைத்து பிடித்தால் பெருச்சாளிகள் தப்பிவிடுகின்றன. விஷம் வைத்து கொன்றால் எங்கேயாவது போய் அது இறந்துவிடும். ஆனால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தாவிட்டால், துர்நாற்றம் வீசி சுகாதார சீர்கேடு ஏற்படும். மேலும் விஷம் தின்று இறந்த எலிகளை மற்ற விலங்கினங்கள் தின்றால் அவையும் உயிரிழந்துவிடும். அதனால் விவசாயிகளுக்கு தொல்லைத்தரும் பெருச்சாளிகளுக்கு பிரத்யேக பொறியை தயாரித்து எலிகளை பிடித்து சேவைபுரியும் மணி விவசாயிகளுக்கு மட்டுமல்ல விவசாயத்தின் தோழன் கூட.

## ஜூன் 15 விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

First Published : 10 Jun 2012 12:05:45 PM IST

ராமநாதபுரம், ஜூன் 9: ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் க.நந்தகுமார் தலைமையில் இம்மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் விவசாயிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த பொருள்கள் குறித்து விவாதிக்குமாறும், கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் ஆட்சியர் அலுவலகம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருநள்ளாறில் விரைவில் உழவர் சந்தை

First Published : 10 Jun 2012 10:37:27 AM IST

காரைக்கால், ஜூன் 9: திருநள்ளாற்றில் விரைவில் உழவர் சந்தை அமைக்கப்படும் என்றார் புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு.

காரைக்கால் மாவட்டம், திருநள்ளாறு பகுதியில் உழவர் சந்தை அமைப்பதற்காக புதுச்சேரி அரசின் கால்நடை துறைக்கு சொந்தமான நிலத்தை, வேளாண் துறையிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு முன்னிலையில், கால்நடை துறை இணை இயக்குநர் (பொ) டாக்டர் லதாமங்கேஷ்கர், கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகனிடம் நில உரிமை பத்திரத்தை ஒப்படைத்தார்.

நிகழ்ச்சியில் வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு பேசியது:

திருநள்ளாறு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் தோட்டக்கலை மேம்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் காய், கனிகள் உழவர் சந்தை மூலம் நியாயமான விலையில் விற்பதன் மூலம் உற்பத்தியாளருக்கும், மக்களுக்கும் கிடைக்கும் பயனை கருதியே உழவர் சந்தை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அடுத்த ஓரிரு மாதங்களில் உழவர் சந்தை பயன்பாட்டுக்கு வரும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவர் ராஜகோபால், வேளாண் துறை அதிகாரிகள் பி. முகம்மது தாசீர், சி. சுந்தரராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## உற்பத்தி உயர்வால் மிளகாய் வற்றல் விலை வீழ்ச்சி

ஜூன் 11,2012,04:23



சென்ற ஆண்டைவிட, நடப்பாண்டில் மிளகாய் வற்றல் விலை, கி@லாவுக்கு 35 முதல் 40 ரூபாயாக Œரிவடைந்துள்ளது.உலகளவில் மிளகாய் உற்பத்தியில், இந்தியா, 43 சதவீத பங்களிப்புடன் முன்னிலை வகிக்கிறது. சீனா மற்றும் இதர நாடுகளின் பங்களிப்பு, முறையே 8.6 சதவீதம் மற்றும் 5.6 சதவீதமாக உள்ளன.

ஏற்றுமதி:உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மிளகாய் நல்ல தரத்துடன் இருப்பதால், வெளிநாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்திய நறுமணப் பொருட்கள் வாரியத்தின் அறிக்கைப்படி, 2011ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில், இந்தியாவிலிருந்து, உலகின் பல்@வறு நாடு களுக்கு, 54 ஆயிரத்து 400 டன் மிளகாய் வற்றல், ஏற்றுமதி செய்யப்பட்டது.சென்ற, 2010-11ம் நிதியாண்டில், மலேசியா, 4,554 டன், இலங்கை, 3,478 டன், வங்கதேசம், 2,817 டன் மிளகாய் வற்றலை ஏற்றுமதி செய்தன.மசாலா பொருட்கள் பதப்படுத்தும் தொழில் மிக வேகமாக வளர்ந்து வரும் நிலையில், உள்நாட்டில் அவற்றின் தேவை அதிகரித்துள்ளது. மிளகாய் உற்பத்தி, நடப்பாண்டு, 10 - 13 லட்சம் டன்னாக இருக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு, 8 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. உள்நாட்டில், மிளகாய் உற்பத்தியில், ஆந்திர மாநிலம் 49 சதவீத பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, கர்நாடகா (14 சதவீதம்), ஒடிசா( 7 சதவீதம்), மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், ராஜஸ்தான் (தலா 5 சதவீதம்), தமிழகம் (4 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

ஈரோடு வேளாண் துணை இயக்குனர் பரமசிவம் கூறியதாவது:தமிழகத்தில் உற்பத்தியாகும் மிளகாய் வற்றல், கோவில்பட்டி, சாத்தூர், சங்கரன்கோவில், ராஜபாளையம், கமுதி, முதுகுளத்தூர்

மற்றும் விருதுநகர் உள்ளிட்ட சந்தைகளுக்கு, மார்ச் இரண்டாவது வாரம் வரத் துவங்கும். தற்போதுள்ள சூழ்நிலையில் விருதுநகர், சந்தைக்கு மட்டும் வற்றல் வந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு, ஒரு கிலோ மிளகாய் வற்றல் விலை, 80 முதல் 90 ரூபாய் வரை இருந்தது. ஆனால், நடப்பாண்டு மிளகாய் விலை குறைந்து வருகிறது. விலை மேலும் அதிகரிக்குமா அல்லது இதே நிலை நீடிக்குமா என தெரியவில்லை.

விலை ஆ#வு:விவசாயிகள் நலன் கருதி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள மையத்தில், மிளகாய் வற்றலின் விலை நிலவரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதில், ஏப்ரல் - மே மாதங்களில் ஒரு கிலோ மிளகாய் வற்றல் விலை, 53 முதல் 55 ரூபாய் வரை இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்து என்பது குறிப்பிடத்தக்கது.

மிளகா# வற்றலின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றாலும், உலர வைத்தல் மற்றும் சேமிப்பதற்கான செலவுகளை கணக்கிட்டால் லாபம் கிடைக்க வாய்ப்பில்லை. எனவே, விவசாயிகள் மிளகாய் வற்றலை இருப்பு வைக்காமல் விற்பனை செய்வதே நல்லது. இவ்வாறு அவர் கூறினார்.- எம்.செல்வம் -

## மாதுளை பழம் விலை இரண்டு மடங்கு உயர்வு

ஜூன் 11,2012,04:22



சேலம்:தமிழகத்துக்கு தேவையான மாதுளை பழங்கள், மகாராஷ்டிர மாநிலம் சாங்கோலா, டில்லி, இமாச்சல பிரதேசம் ஆகிய இடங்களில் இருந்து வருவது வழக்கம். ஆனால், தற்போது பழங்களின் வரத்து அடியோடு நின்று விட்டது.கர்நாடக மாநிலம்:அதே நேரம், தமிழகத்தில் அதிகரித்து வரும் வெயில் தாக்கம் காரணமாக, மாதுளை பழங்களின் விற்பனையில் சுறுசுறுப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கர்நாடக மாநிலம், இரியூர் பகுதியில் இருந்து, குறைந்த அளவிற்கே மாதுளை

பழங்கள் சேலத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.
அதனால், மாதுளை பழங்களின் விலையில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை, மொத்த விற்பனை நிலையங்களில், 10 கிலோ எடை கொண்ட மாதுளை பழப்பெட்டி, 800 முதல், 900 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.ஆனால், நேற்று அதே எடை அளவு கொண்ட பெட்டி, 1,800 முதல் 1,900 ரூபாய் வரையில் விற்பனையானது. ஒரே வாரத்தில் பெட்டிக்கு, 1,000 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.
வரத்தில் Œரிவு:சில்லரை விலையில், கிலோ, 90 முதல், 110 ரூபாய் வரையில் விற்ற மாதுளை பழங்கள், தற்போது, 190 முதல், 225 ரூபாய் வரை விற்கப்படுகின்றன. மாதுளை பழங்களின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளதால், இந்த பழங்களின் விலை, மேலும் உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.
ஆந்திர மாநிலம், கடப்பா, ராஜமுந்திரி பகுதிகளில் இருந்தே, தமிழகத்துக்கு சாத்துக்குடி பழங்கள் விற்பனைக்கு வரும். தற்போது வெயில் தாக்கம் அதிகரித்துள்ளதால், இந்த பழங்களுக்கு, தமிழகத்தில் @தவை அதிகரித்துள்ளது.
சாத்துக்குடி:அதே நேரம், எதிர்பார்த்த வரத்து இல்லாததால், சாத்துக்குடி பழங்களின் விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ, 40 முதல், 45 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட சாத்துக்குடி பழங்கள், தற்போது, 55முதல், 60 ரூபாய் வரை விற்கப்படுகின்றன.
இந்த பழங்களின் வரத்து எதிர்பார்த்த அளவு இல்லாததால், இவற்றின் விலை மேலும் உயரும் எனத் தெரிகிறது.
சேலம் பழ வியாபாரிகள் சங்க தலைவர் குப்புசாமி கூறியதாவது:மகாராஷ்டிர மாநில மாதுளை பழங்களின் வரத்து நின்று விட்டது. அதே நேரத்தில், குளிர்பதன கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு இருந்த பழங்களும் விற்று விட்டன.அதனால், கர்நாடகாவில் இருந்து விற்பனைக்கு வரும் மாதுளை பழங்களை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
விலை உயர்வு:இதை, தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட கர்நாடக வியாபாரிகள், மாதுளை பழத்தின் விலையை உயர்த்தி விட்டனர்.
மாதுளை பழங்களின் விலையில், வரலாறு காணாத வகையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.சாத்துக்குடி பழங்களின் வரத்தும் இல்லை. தற்போது சீசன் இல்லாத காரணத்தால், சாத்துக்குடி, மாதுளை பழங்களின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.
இந்த உயர்வு, ஆகஸ்ட் மாதம் கடைசி வாரம் வரை தொடரும்.
சரிவு என்ற பேச்சுக்கே இடமில்லை.இருந்த போதிலும், தற்போது விற்பனைக்கு வரும் பழங்கள் அனைத்தும் முதல் தரமான பழங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு குப்புசாமி கூறினார்.

## சர்க்கரை விலை மூட்டைக்கு ரூ.20 உயர்ந்தது

ஜூன் 11,2012,04:21



விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில், சர்க்கரை விலை மூட்டைக்கு, 20 ரூபா# உயர்ந்து, 3,055 ரூபாயாக அதிகரித்துள்ளது. மேலும், பொரி கடலை விலையும் மூட்டைக்கு 100 ரூபா# உயர்ந்துள்ளது. இருப்பினும், பருப்பு விலையில் எவ்வித மாற்றமும் இல்லை.

இவை தவிர, விருதுநகர் சந்தையில், ஒரு டின் பாமாயில் விலை 1,035 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் 1,230 ரூபாயாகவும் இருந்தது.நிலக்கடலைபருப்பு விலை மூட்டைக்கு 5,200 ஆகவும், கடலை புண்ணாக்கு விலை 3,600 ரூபாயாகவும் இருந்தது.

இந்தோனேஷியா மற்றும் மலேசியாவிலிருந்து பாமாயில் வரத்து அதிகரித்துள்ளதால் இதன் விலை குறைந்துள்ளது.

உளுந்து மூட்டை 3,500 லிருந்து 3,600 ரூபாயாகவும், பர்மா உளுந்து 3,300 ஆகவும், பொடி உளுந்து 3,200 ஆகவும், உளுந்தம் பருப்பு 5,400 ஆகவும், பர்மா உளுந்தம் பருப்பு 4,900 ரூபாயாகவும் உள்ளது.

துவரை விலை 3,900 ரூபாயிலிருந்து 4,000 வரையும், பொடித் துவரை 3,800 ரூபாயாகவும், துவரம் பருப்பு 6,500 ஆகவும், பொடி துவரம் பருப்பு 5,700 ரூபாயாகவும் உள்ளது.

நாட்டு பாசிப்பயறு 5,400 லிருந்து 5,700 வரையும், லயன் பாசிப்பயறு 6,000 ஆகவும், பாசிப் பருப்பு 5,300 ஆகவும், பொடிப் பாசிப் பருப்பு 5,000 ரூபாயாகவும் உள்ளது.

கொண்டைக் கடலை விலை 5,250 ரூபாயாகவும், பொரி கடலை 3,960 ரூபாயாகவும் உள்ளது.

மைதா 2,480 ஆகவும், ரவை 2,290 ரூபாயாகவும் உள்ளது. விருதுநகர் Œந்தையில் கடந்த வாரம் பயறு, பருப்பு வியாபாரம் மந்தமாக இருந்தது.

## நாட்டின் காபி ஏற்றுமதி 3.50 லட்சம் டன்னாக குறையும்

ஜூன் 11,2012,04:20



புதுடில்லி:நடப்பு 2011-12ம் காபி பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்), நாட்டின் காபி ஏற்றுமதி, 3.49 லட்சம் டன்னாகக் குறையும். இது, முந்தைய 2010-11ம் பருவத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 1 சதவீதம் (3.52 லட்சம் டன்) குறைவு என, அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது.கடந்த 2009-10ம் பருவத்தில், காபி ஏற்றுமதி, 2.68 லட்சம் டன் என்றளவில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில், 60 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சர்வதேச அளவில், இந்தியாவின் ரோபஸ்டா வகை காபிக்கு, அதிக தேவைப்பாடு உள்ளது.

நாட்டின் காபி ஏற்றுமதிக்கு, ஐரோப்பிய நாடுகள் முக்கிய சந்தைகளாகத் திகழ்கின்றன.இந்தியாவில், கடந்த 10 ஆண்டுகளாக, பன்னாட்டு நிறுவனங்கள், பிரத்யேக காபி விற்பனை மையங்களை அதிகளவில் அமைத்து வருகின்றன. இதனால், தேநீர் அருந்தும் பழக்கம் கொண்ட பலர், குறிப்பாக, இளைஞர்கள், காபி அருந்தத் தொடங்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## எள், கடலை ஏற்றுமதியால் எண்ணெய் விலை விர்...

ஜூன் 11,2012,00:41

திண்டுக்கல்:எள், கடலை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதால் நல்லெண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் விலை, கடந்த ஓராண்டில் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது.திண்டுக்கல் சந்தையில் நல்லெண்ணெய் டின் (15 கிலோ) 1,550 ரூபாய்க்கும், கடலை எண்ணெய் டின் 1,600 ரூபாய்க்கும், விளக்கெண்ணெய் 1,300 ரூபாய்க்கும், தேங்காய் எண்ணெய் 1,100 ரூபாய்க்கும், ரீபைண்ட் ஆயில் 1,200 ரூபாய்க்கும், பாமாயில் ரூ.975 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, இவற்றின் விலை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. உற்பத்தி அதிகரிப்பால், கடந்த மூன்று மாதங்களில் தேங்காய் எண்ணெய் விலை மட்டும் ரூ.200 குறைந்துள்ளது.திண்டுக்கல் எண்ணெய் மொத்த வியாபாரி சதீஷ் கூறியதாவது:எள், கடலை ஆகியவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதை தவிர்த்தால் நல்லெண்ணெய், கடலை எண்ணெயின் விலை டின்னுக்கு ஆயிரம் ரூபாய் வரை குறையும். எள், நிலக்கடலை பருப்பு ஆகியவற்றின் மொத்த ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்திருந்தாலும், பாக்கெட்களில் அடைத்து அனுப்புவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
எனவே, சிறிய பாக்கெட்களில் பொருட்களை அடைத்து, டன் கணக்கில் ஏற்றுமதி செய்கின்றனர். அதே நேரம், பாமாயிலை அதிக அளவில் இறக்குமதி செய்கின்றனர்.எள், நிலக்கடலை பருப்பு ஏற்றுமதிக்கு தடை விதித்தால் எண்ணெய் விலை குறைவதற்கான வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## குப்பையில் உரம் தயாரிக்கும் மகளிர் குழுவினர்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,05:44 IST

பனமரத்துப்பட்டி: சேலம் மாவட்டம், மல்லூர் பேரூராட்சியில், குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் பணியில், மகளிர் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.
மல்லூர் பேரூராட்சியில், 15 வார்டுகள் உள்ளன. அதில், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் குப்பைகளால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை தடுக்க, அனைத்து பேரூராட்சிகளிலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த, அரசு உத்தரவிட்டுள்ளது.
மல்லூர் பேரூராட்சியில், 2008-2009ம் ஆண்டு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில், ஐந்து லட்சம்

ரூபாய் மதிப்பில், குப்பைகளை உரமாக்கும் கிடங்கு கட்டப்பட்டது. துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, குப்பை சேகரித்தல், தரம் பிரித்தல், உரம் தயாரித்தல் உள்ளிட்ட பணிகள் முழுமையாக நடைபெறாமல் இருந்து வந்தது.தற்போது, குப்பைகளை சேகரித்து, மக்கும் குப்பை, மக்காத குப்பை என, தரம் பிரித்து, மக்கும் குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் பணியில், மகளிர் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இப்பணிக்கு நாள் ஒன்றுக்கு, 60 ரூபாய் சம்பளம் என்ற ஒப்பந்த அடிப்படையில்,15 பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலை 6 மணி முதல் 11 மணி வரை, துப்புரவு பணியாளர்களுடன், மகளிர் குழுவினர் வார்டு வாரியாக சென்று குப்பைகளை சேகரித்து, அதில், பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக தரம் பிரித்து எடுக்கின்றனர். மதியம் 2 மணிக்கு திடக்கழிவு மேலாண்மை கிடங்கு சென்று, குப்பைகளை மக்கச் செய்து, அதிலிருந்து உரம் தயாரிக்கும் பணியில், மகளிர் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.மல்லூர் பேரூராட்சி பகுதியில், 500 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளை மண்ணில் சேரவிடாமல் மகளிர் குழுவினர் தரம் பிரித்து, உரக்கிடங்கில் சேகரித்து வைத்துள்ளனர்.இது குறித்து, மல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் பிரபுதாஸ், துணை தலைவர் அய்யனார் ஆகியோர் கூறியதாவது: மல்லூர் பேரூராட்சி பகுதியில், டிராக்டர் செல்ல முடியாத சிறிய தெரு, வீதிகளில், கை வண்டி எடுத்துச் சென்று குப்பைகளை சேகரித்து வர, ஒப்பந்த அடிப்படையில் ஒரு வார்டுக்கு ஒருவர் வீதம், 15 பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.இவர்கள், காலையில் வார்டு வாரியாக சென்று, குப்பைகளை எடுத்து, மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக தரம் பிரித்து, டிராக்டரில் போடுகின்றனர். மாலையில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் கட்டப்பட்ட கிடங்கு தொட்டிகளில் மக்கும் குப்பைகளை நிரப்பி, தண்ணீர், மருந்து தெளித்து மக்கச் செய்கின்றனர்.அதன் பிறகு மக்கிய குப்பைகளில் இருந்து, உரம் தயாரிக்கின்றனர். மகளிர் குழுவினர் தயாரித்து வரும் ஒரு டன் உரம், 250 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.மேலும், வீடுகள், வீதிகளில் கிடக்கும், பிளாஸ்டிக் கழிவுகளை (மக்காத குப்பை) மகளிர் குழுவினர் சேகரித்து வருகின்றனர். இந்த பிளாஸ்டிக் கழிவுகளை மறு சுழற்சி செய்து, சிறு சிறு துகள் போல் அரைத்து பிளாஸ்டிக் ரோடு போட பயன்படுத்தப்படும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஜி.அரியூரில் நவீன கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு நேரடி செயல் விளக்கம்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,03:51 IST

திருக்கோவிலூர் : ஜி.அரியூரில் நவீன கரும்பு சாகுபடியில் நிழல் வலை கூடம் அமைத்தல் குறித்து செயல் விளக்கம் காண்பித்தனர்.

திருக்கோவிலூர் அடுத்த ஜி.அரியூர் கிராமத்தில் விவசாயி கிருஷ்ணன் தனது கரும்பு தோட்டத்தில் நவீன தொழில் நுட்பத்தில் நிழல் வலை கூடம் அமைத்துள்ளார். வேளாண் உதவி இயக்குனர் ஆறுமுகம் நிழல்வலை கூடத்தை திறந்து வைத்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.
வேங்கூர் மெட்ராஸ் சுகர்ஸ் ஆலையின் கரும்பு முதுநிலை மேலாளர் பாலகிருஷ்ணன் பேசுகையில், கரும்பு சாகுபடி மற்றும் கரும்பு அறுவடைக்கு ஆட்கள் பற்றாக்குறை நிலவுவதால் இயந்திர மயமாக்கல் அவசியம். அதற்கு சொட்டுநீர் பாசனம், இயந்திரம் கொண்டு அறுவடை செய்வது, களை எடுப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டால் கரும்பு விவசாயம் லாபகரமானதாக இருக்கும் என்றார். கரும்பு கோட்ட அலுவலர் ராஜா நன்றி கூறினார்.

## வெள்ளரி பழங்கள் விற்பனை "ஜோர்'

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,03:43 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பகுதியில் வெள்ளரி பழம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் அதிக அளவில் பழங்கள் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
கள்ளக்குறிச்சியில் கடந்த சில நாட்களாக அக்னி முடிந்தும் கடும் வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்து வருகிறது. கோடைக்கு இதமான தர்பூசணி சீசன் முடிந்து விற்பனையும் குறைந்துள்ளது. அதனை போக்கும் வகையில் வெள்ளரி பழம் விற்பனை கள்ளக்
குறிச்சியில் பல்வேறு இடங்களில் படுஜோராக நடந்து வருகின்றது.
கச்சிராயபாளையம் அடுத்த கோமுகி அணை ஆற்று படுகையில் வெள்ளரி பழம் விளைச்சல் அதிகரித்தள்ளதால் கள்ளக்குறிச்சியில் ஆங்காங்கே குவிக்கப்பட்டு குறைந்த விலையில் விற்கப்படுகிறது.

## பட்டு விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கல்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,06:02 IST

தர்மபுரி; தர்மபுரி மாவட்ட பட்டுவளர்ச்சி துறை கட்டுப்பாட்டில் செயல்படும் பட்டு வளர்ப்பு விரிவாக்க தொழில்நுட்ப சேவை மையங்கள் சார்பில், 2011-12ம் ஆண்டு மல்பரி சாகுபடி செய்த 16 விவசாயிகளுக்கு மானிய நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.கலெக்டர் லில்லி கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு புழு மனை வளர்ப்பு மானிய நிலை ஒன்றுக்கு, 75 ஆயிரம் ரூபாயும், மானிய நிலை மூன்றிற்கு 25 ஆயிரம் ரூபாயும், ஏக்கருக்கு மல்பரி நடவு செய்ய மானியம், 4,125 ரூபாயும் வழங்கினார். மொத்தம் இரண்டு லட்சத்து 22 ஆயிரத்து

437 ரூபாய் மதிப்பில் புழு வளர்ப்பு மனை கட்டவும், புதிய நடவு மல்பரி மானியமும் வழங்கப்பட்டது. பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஜெயக்குமார், தொழில்நுட்ப அலுவலர் சின்னராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மாரண்டஅள்ளி சந்தையில் ஆடு விற்பனை மந்தம்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,06:01 IST

தர்மபுரி: தர்மபுரி அருகே மாரண்டஅள்ளி வாரச்சந்தையில், ஆடுகள் விற்பனை குறைவாக நடந்தது. எதிபார்த்த விலைக்கு போகாததால், ஆடுவளர்ப்போர் கவலையடைந்தனர்.தர்மபுரி மாவட்டம், மாரண்ட அள்ளியில் வாரந்தோறும் ஞாயிற்று கிழமை சந்தை கூடுகிறது. இந்த சந்தையில் காரிமங்கலம், பாப்பாரப்பட்டி, சாஸ்திரமுட்லு, பெல்ரம்பட்டி, பஞ்சப்பள்ளி உள்ளிட்ட பகுதியில் இருந்து வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். ஆடுகளை வாங்குவதற்கு ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள், உள்ளூர் வியாபாரிகள் அதிகளவில் வருவார்கள்.நேற்று நடந்த சந்தையில், விற்பனைக்காக, 1,000க்கும் மேற்ப்பட்ட ஆடுகள் வந்தன. 25 கிலோ எடையுள்ள வெள்ளாடுகள், 7,500 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த விலையை ஒப்பிடும்போது கடந்த வாரத்தை விட, 1,000 ரூபாய் குறைவாக விற்பனையானது. வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வருகை குறைவாக காணப்பட்டதால் ஆடுகள் எதிர்பார்த்த விலைக்கு போகவில்லை.

## கரும்பு அறுவடை சீஸன் நிறைவுஉயராத விலையால் அதிருப்தி

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,07:00 IST

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில், கரும்பு அறுவடை சீஸன் முடியும் தருவாயில் இருப்பதால், அடுத்த ஆண்டுக்கான கரும்பு வளர்ப்பில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். ஆனால், கரும்பின் விலை உயராததால், விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில் 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், கரும்பு, வாழையை பயிர் செய்து வருகின்றனர். இங்கு கருப்பு கரும்பு, ஆலைக்கரும்பு என இரு வகையாக பயிரிடுகின்றனர்.

சில விவசாயிகளே கருப்பு கரும்பை வளர்த்து வருகின்றனர். கருப்பு கரும்பினை சித்திரையில் கரும்பு நடவு செய்து, அதனை தை மாதத்தில் அறுவடை செய்வது, கரும்பு விவசாயிகளின் வழக்கம். தற்போது ஈரோடு மாவட்டத்தில், விதைக் கரும்பின் விளைச்சல் ஜோராக இருப்பதால்,

அடுத்த ஆண்டுக்கான கரும்பு நடவு செய்திட, விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து கரும்பு விவசாயிகள் கூறுகையில், ""கருப்பு கரும்பு முழு வளர்ச்சியடைய எட்டு மாதங்கள் வரை ஆகும். சித்திரையில் நடவு செய்தால், தை மாதத்தில் அறுவடைக்கு ஏற்ப, கரும்பு முழு வளர்ச்சியை பெற்றிருக்கும். சித்திரை நடவுக்கு முன், கருப்பு கரும்பு விதைக்காக வளர்த்து, அதனையே நடவு செய்வது வழக்கம்.""சில மாதத்துக்கு முன் கருப்பு கரும்பினை, நிலத்தில் விதைத்தோம். அதன் வளர்ச்சி நன்றாக இருப்பதால், 2013ம் ஆண்டு பொங்கலுக்குள், கருப்பு கரும்பு அதிக விளைச்சலை கொடுக்கும். பல போராட்டத்துக்கு பின்னும், கரும்பு விலை உயராததால், விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.
""கருப்பு கரும்பை நடவு செய்த பல விவசாயிகள், ஆலைக்கரும்புக்கு மாறிவிட்டனர். தற்போது கரும்பு அறுவடை சீஸன் முடியும் தருவாயில் உள்ளது. விரைவில், கரும்பு நடவும் பணி துவங்கும்,'' என்றனர்.

## திருந்திய நெல் சாகுபடிக்கு 12 ஆயிரம் ஏக்கர் இலக்கு

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,07:02 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில், 12 ஆயிரம் ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் முதல் போகத்துக்கான நெல் நடவுப் பணி தீவிரமாக நடக்கிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, பாரியூர், கூகலூர் உள்ளிட்ட பகுதிகளில், 24 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்படுகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில், 3,000 ஆயிரம் ஏக்கரில் திருந்திய நெல் நடவு செய்யப்படுகிறது.கோபி வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) ஆசைத்தம்பி கூறியதாவது:இம்முறையில், 14 - 15 நாள் வயதுள்ள ஒரே ஒரு இளம் நாற்றை, முக்கால் அடி இடைவெளியில் நடவு செய்வதன் மூலம், 20 சதம் முதல் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. விவசாயிகளிடம் இந்த முறை மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில் முதல்போக நெல் நடவுப் பணி துவங்கியதை அடுத்து, வேளாண்மைத் துறை மூலம் திருந்திய நெல் சாகுபடி குறித்த செயல் விளக்கள், விழிப்புணர்வு பணி மேற்கொள்ளப்படுகிறது.கோபி வட்டாரத்தில் சென்றாண்டு குறுவை மற்றும் சம்பா பட்டங்களில், 10 ஆயிரம் ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பாண்டு, 12 ஆயிரம் ஏக்கரில் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு குறுவைப் பருவத்தில் மட்டும், 3,000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடியை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

குறுவைப் பருவத்துக்கு வேளாண் துறை பரிந்துரைத்துள்ள ஏ.எஸ்.டி.16, - ஏ.டி.டி.,36, - ஏ.டி.டி.45 போன்ற குறுகிய கால வயதுடைய ரகங்கள் ஏற்றவை.கோபி வட்டார வேளாண் துறை மூலம் இதுவரை, 52 டன் சான்று பெற்ற விதைகள் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. 35 டன், ஏ.எஸ்.டி.,16 ரக விதை நெல் இருப்பு உள்ளது. விதைக்கு கிலோவுக்கு, ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.குறுவை பட்டத்தில் கடந்தாண்டு திருந்திய நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, ஹெக்டேருக்கு, 3,000 ரூபாய் மதிப்பில் இடுபொருட்களும், கருவிகளும் வழங்கப்பட்டது. நடப்பாண்டிலும் மானியம் வழங்கப்பட உள்ளது. திருந்திய நெல் சாகுபடியை ஊக்குவிக்க திடல்கள் அமைக்கப்பட்டு மேட்டுபாத்தி நாற்றங்கால் தயார் செய்வது குறித்து, வேளாண் உதவி அலுவலர்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் உடனடியாக, கோபி பஞ்சாயத்து யூனியன் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம். 04285 22 17 77, 99425 04181 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**பசுந்தேயிலை பறிக்க "கத்தி'**

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,04:46 IST

குன்னூர் : நீலகிரியில், தேயிலை தூளுக்கு போதிய விலை கிடைத்து வரும் நிலையில், ஊரகப் பகுதிகளில், கத்தி மூலம் பசுந்தேயிலை பறிக்கப்படுவதால் தேயிலையின் தரம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நீலகிரியின் பிரதான தொழிலாக உள்ளது தேயிலை. இங்கு, 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். கடந்த காலங்களில், நீலகிரி தேயிலைக்கு கிராக்கி ஏற்பட்டதால், இலைகளை பறிக்க முடியாத நிலையில், பலர் கத்திகளை பயன்படுத்தி பறிக்கத் துவங்கினர். இதனால், முதிர்ந்த இலை, கரட்டு இலை, காம்புகள் பறிக்கப்பட்டு, தூள் தயாரிக்கப்பட்டதால் தரம் குறைந்தது.

இதனால், 2000ம் ஆண்டிலிருந்து தேயிலை தொழிலில் வீழ்ச்சி ஏற்பட்டு, விவசாயிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகினர். இந்நிலையில், தேயிலையின் தரத்தை உயர்த்த, தேயிலை வாரியம் மற்றும் உபாசி ஆகியவை, தேயிலை தர மேம்பாட்டு முகாம்களை நடத்தி, தரமான தேயிலையை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தரமான தேயிலை தூளை உற்பத்தி செய்ய, இரு இலை ஒரு கொழுந்து வீதம் தேயிலை பறிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதன் பின், படிப்படியாக, நீலகிரி தேயிலைக்கு மீண்டும் மவுசு கூடியுள்ளது. தற்போது, குன்னூர் கூட்டுறவு தேயிலை ஏல மையம் மற்றும் குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், தேயிலை தூளுக்கு கூடுதல் விலை கிடைத்து வருகிறது.

கடந்த வாரம், குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு சராசரியாக 2 ரூபாயும், குன்னூர் கூட்டுறவு தேயிலை ஏல மையம் சராசரியாக 3 ரூபாய் விலை உயர்வு கிடைத்தது. விலை உயர்வுக்கு, நீலகிரி தேயிலை தூளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதே காரணம். இந்நிலையில், ஊரகப் பகுதிகளில் தற்போது மீண்டும் கத்தி கலாசாரம் துவங்கியுள்ளது.
குறிப்பாக, குன்னூரை சுற்றியுள்ள சேலாஸ், கரும்பாலம், தூதூர்மட்டம் உட்பட பகுதிகளில், மக்கள் கத்தியை பயன்படுத்தி தேயிலை பறித்து வருகின்றனர். தேயிலை வாரியம் மற்றும் உபாசி, கத்தி கலாசாரத்தை வளர விட்டால் மீண்டும் நீலகிரி தேயிலையின் தரம் குறையும் அபாயம் ஏற்படும்.

## விலையிருந்தும் மழையில்லை; தேயிலை விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,04:43 IST

மஞ்சூர் :
பருவமழை தாமதத்தால் தேயிலை விவசாயிகள் கவலையடைந்துள்ள நிலையில், மழை வேண்டி கிராமங்கள் தோறும் சிறப்பு பூஜைகளும் நடந்து வருகிறது.
நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை தொழில் முக்கிய தொழிலாக உள் ளது.
கடந்த நவம்பர் மாதம் துவங்கிய பனிப்பொழிவு நடப்பாண்டு ஏப்ரல் மாதம் வரை நீடித்தது. நடப்பாண்டில் ஜூன் மாதம் துவங்கியுள்ள நிலையில் போதுமான மழை இல்லாமல் தேயிலை வரத்து அடியோடு குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.
இந்நிலையில், தென் மேற்கு பருவ மழையை நம்பி இருந்த தேயிலை விவசாயிகளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆண்டு தோறும் பொதுவாக மே மாதம் இறுதியில் துவங்கும் தென் மேற்கு பருவ மழை ஜூன் மாதம் வரை நீடிக்கும். அதன் பிறகு சற்று மழை குறைந்து காணப்படும். அதன் பின் வட கிழக்கு பருவ மழை நவம்பர் மாதம் பெய்ய துவங்கும். தற்போது கால நிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் சரியான கால கட்டத்தில் பருவ மழை துவங்காமல், கடந்த இரு வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது.
சில இடங்களில் மட்டும் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. பருவ மழையும் பெய்யாமல் இதே நிலை நீடித்தால் இந்த ஆண்டு முழுவதும் மழையின் அளவு குறைந்து தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து அடியோடு குறைந்துவிடும்.
இந்நிலையில், மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்களில் மழை வேண்டி வருண பகவானுக்கு

சிறப்பு பூஜைகளும் நடந்து வருகிறது.

விலை இருக்கு; இலை இல்லை: நடப்பாண்டின் துவக்கத்திலிருந்து பசுந்தேயிலை கிலோவுக்கு 12 ரூபாய் முதல் 14 ரூபாய் வரை கிடைத்து வருகிறது.

இந்த விலையால் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதே சமயத்தில் போதுமான மழை இல்லாததால் தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து அடியோடு குறைந்துள்ளதால், அதிக விலையை பெற முடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பசுந்தேயிலைக்கு விலை கிடைக்காமல் ஒருபுறம் போராட்டம், மறுபுறம் விலை இருந்தும் மழை இல்லாமல் இருப்பது தேயிலை விவசாயிகளை வாட்டி வருவது வேதனையடைய வைக்கிறது.

கார்போக விவசாயம் பாதிப்பு: பருவ மழை காலம் தாழ்த்தி வரும் நிலையில் மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளும் இடங்களில் கார் போக விவசாயம் பாதிக்கப்படும் நிலை இருப்பதால் மலை காய்கறி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,04:30 IST

ஊட்டி : நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 15ம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட கலெக்டர் தலைமையில் நடக்கவுள்ளது. விவசாயிகள், விவசாயம் சம்மந்தப்பட்ட குறைகள் இருப்பின் பிரதி மாதம் 10ம் தேதிக்குள் "இணை இயக்குனர், தபால் பெட்டி எண்.72, ஊட்டி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விவசாயிகள் தங்களின் பொதுவான கோரிக்கையை தவிர்த்து விவசாயம் சம்மந்தப்பட்ட மற்றும் நீர்பாசனம், இடுபொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் மனுவாக அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு, மோகன் கூறியுள்ளார்.

## அரிசி ஆலைகளை நவீனப்படுத்த மானியம்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,05:48 IST

திருச்சி: "மின்கட்டண உயர்வு உள்ளிட்ட பிரச்னைகளால் மூடும் நிலையில் உள்ள தமிழக அரிசி ஆலைகளை நவீனப்படுத்த மத்திய, மாநில அரசுகள் 100 சதவீதம் மானியம் வழங்கிடவேண்டும்' என்று அரவை முகவர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.திருச்சி மாவட்ட அரவை முகவர்கள் சங்கத்தின் துணைத்தலைவர் புலியூர் நாகராஜன், தமிழக முதல்வர் ஜெயலலிதா, மத்திய

உணவுத்துறை அமைச்சர் சரத்பவார், தமிழக உணவுத்துறை அமைச்சர் காமராஜ், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை செயலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தலைவர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது:தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்துக்கு நெல் அரவை செய்து கொடுக்கும் பணியில் தமிழ்நாட்டில் 400க்கும் மேற்பட்ட நவீன அரிசி ஆ லைகள் உள்ளன. இந்திய உண வு கழகத்தின் நோடல் ஏஜென்ஸியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் உள்ளது.தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்துக்கு நெல் கொள்முதல் செய்யவும், அரவை செய்யவும் உண்டான முழு நிதியினை மத்திய அரசே வழங்குகிறது. தற்சமயம் 100 கிலோ நெல் அரவை செய்ய 20 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. ஒரு குவிண்டால் நெல்லுக்கு 100 ரூபாயாக உயர்த்தி தரவேண்டும்.ஆனால் தற்சமயம் 100 சதவீத மின்கட்டண உயர்வு, 300 சதவீத கூலி உயர்வு, 100 சதவீத நிர்வாகச்செலவு அதிகரிப்பு, 300 சதவீத டீஸல் விலை உயர்வு, வங்கிக்கடன், அந்த கடனுக்கான வட்டிக்கட்டமுடியாத நிலை போன்றவற்றால் அரிசி ஆலைகள் தொடர்ந்து நெல் அரவை செய்து பொது விநியோகத்துக்கு கொடுப்பதில் கடும் நஷ்டம் ஏற்பட்டு, ஆலைகளை இழுத்து மூடும் அபாயநிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசி ஆலைகளில் நெல் மற்றும் அருசி மூட்டைகளை ஏற்றி, இற ங்க ஆட்கள் வேலைக்கு கிடைப்பதில்லை. கிராமப்புறங்களில் 100 நாள் வேலையை பார்க்கவு ம், நகரப்புறங்களல் கட்டிட வே லைக்கும் தொழிலாளர்கள் செல்வதால், அரிசி ஆலைக்கு வேலை செய்ய ஆட்கள் கிடைக்காத அவலநிலை காரணமாக ஆலைகள் மூடும் நிலையில் உள்ளன.அரிசி ஆலைகளை நவீனப்படுத்த மத்திய, மாநில அரசுகள் 100 சதவீதம் மானியம் வழங்கிடவேண்டும். நெல்லை அரவை செய்யும்போது கண்டுமுதல் குறைவு ஏற்பட்டு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் விளையும் நெல்லுக்கு உரிய கண்டுமுதல் நிர்ணயம் செய்யவேண்டும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாகம், வாடகைக்கட்டணத்தையே அரவை முகவர்களுக்கு வழங்கிடவேண்டும். அதைவிட்டு ஒப்பந்தக்காரர் கட்டணம் என்று சொல்லி 100 கி.மீ., தூரத்துக்கு ஒரு டன்னுக்கு 140 ரூபாய் எனவும், அதற்கு குறைவாகவும் நிர்ணயம் செய்யப்படும் அவல நிலை உள்ளது.டீஸல் விலை உயர்வு காரணமாக பலமடங்கு வாடகைக்கட்டணம் உயர்ந்துள்ளது. எனவே, கழக நிர்வாக வாடகை நிர்ணய கட்டணத்தை அரவை முகவர்களுக்கு வழங்கிடவேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டுதகாரன்புதூரில் பசுந்தீவன பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,06:38 IST

கரூர்: கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 14ம் தேதி "வெள்ளாடு வளர்ப்பு மற்றும் பசுந்தீவன சாகுபடி பயிற்சி

நடக்கிறது.வெள்ளாடு வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, பசுந்தீவன சாகுபடி, கலப்பு தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள் மற்றும் பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் பங்கேற்போர் காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்துக்கு செல்ல வேண்டும்.மேலும், "04324-294335 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்' என மைய இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

## ஜூன் 15 முதல் கரும்பு அரவை நிறுத்தம்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,06:11 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: "தஞ்சையை அடுத்துள்ள குருங்குளம் சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை ஜூன் 15ம் தேதி முதல் நிறுத்தப்படும்' என, ஆலையின் தலைமை நிர்வாகி தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் அருகே குருங்குளம் சர்க்கரை ஆலையில் தலைமை நிர்வாகி தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தலைமையில் கரும்பு அரவையை நிறுத்தும் தேதியை தீர்மானிப்பது குறித்த ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இதில், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.முடிவில் தலைமை நிர்வாகி தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் பேசியதாவது:தஞ்சை மாவட்டம் குருங்குளம் சர்க்கரை ஆலை 2011-12 அரவை பருவம் 2011 நவ., 21ம் தேதி துவங்கியது. இதுவரை மூன்று லட்சத்து 13 ஆயிரத்து 189 மெட்ரிக் டன்கள் அரவை செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை துறை ஆணையர் கரும்பு பரிமாற்றம் ஒப்புதல் பெற்று இதுவரை ஒரு லட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன்கள் கரும்பு மற்ற ஆதலைகளின் மூலம் அரவை செய்யப்பட்டுள்ளது.இப்பருவத்தில் 4.75 லட்சம் மெட்ரிக் டன் கரும்பு மதிப்பீடு செய்யப்பட்டு அனைத்து பதிவு கரும்புகளும் வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டது.

இதுவரை மொத்தம் நான்கு லட்சத்து 43 ஆயிரத்து 189 மெட்ரிக் டன்கள் அறுவடை செய்து குருங்குளம் சர்க்கரை ஆலை மற்றும் வெளி ஆலைக்கு அனுப்பப்பட்டது.மீதமுள்ள 35 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுள்ள பதிவு கரும்புகள் வெட்டி முடிக்க வேண்டியுள்ளது. இதுவரை வெட்டி முடித்த கரும்புக்கு 56 கோடியே 50 லட்சம் கரும்பு கிரயத்தொகை விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்பட்ட ஜூன் 15ம் தேதி முதல் ஆலையில் கரும்பு அரவை பணிகள் நிறுத்தப்படும்.இதைத்தொடர்ந்து, எதிர்வரும் 2012-13 அரவை பருவம் வரும் அக்டோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் மீண்டும் துவங்க அனைத்து ஏற்பாடுகளும்

செய்யப்பட்டு வருகிறது.வரும் அரவை பருவத்தில் 4.30 லட்சம் மெட்ரிக் டன்கள் அரவை செய்ய கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. கரும்பு மகசூலை பெருக்கவும், சர்க்கரை கட்டுமானம் கூட்டவும் குறிப்பாக சி.ஓ., 86032, சி.ஓ., 99006, சி.ஓ., 99004 போன்ற ரகங்களை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்ய வேண்டும்.அனைத்து பதிவு கரும்புகளும் விவசாயிகளுக்கு பாதிப்பில்லாமல் வெட்டி அரவை செய்யப்படும். கரும்பு மகசூலை பெருக்க நிழல்வலை அமைத்து நீடித்த, நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பத்தை கடைப்பிடிக்க வேண்டும்.
கரும்பில் இயந்திர சாகுபடி முறையை கொண்டு வரவும், சாகுபடி செலவுகளை குறைக்கவும், தண்ணீரை சிக்கனப்படுத்த சொட்டு நீர்ப்பாசன தொழில்நுட்ப முறையை மேற்கொள்ளவும் வழிவகை காண வேண்டும்.எதிர்காலத்தில் சர்க்கரை ஆலையில் மின்சார உற்பத்தி, எத்தனால் உற்பத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படும். அரசு மூலம் மானியமும், வங்கி மூலம் கடன் வசதியும் பெற்றுத்தரப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.

## அழிந்து வரும் தென்னை விவசாயம்அதிகரித்து வரும் "மரக்'கொலைகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,00:59 IST

திருப்புவனம்:திருப்புவனம் பகுதியில் தென்னை விவசாயம் அழிந்து வருகிறது. விளைநிலங்கள் எல்லாம் வீட்டுமனையாக மாறுவதற்கு வேளாண் துறையும் ஒரு காரணம் என விவசாயிகள் குமுறுகின்றனர்.தென்னை விவசாயத்தில் பூச்சி, வண்டு,நோய் தாக்குதல், கட்டுபடி விலை, தொழிலாளர்கள் பற்றாக்குறை, கூலி காரணமாக தென்னை விவசாயத்தை விவசாயிகள் கைவிடும் நிலை நிலவுகிறது. செலவழித்து கட்டுபடியாகாததால், ஒரேயடியாக நிலத்தை வீட்டுமனையாக விற்க முடிவெடுத்து, விவசாயத்தை அழித்துவருகின்றனர். உயிருள்ள மரங்களும், மரக்கொலைகளால் மடிந்துவருகின்றன

## பருத்தி பயிரை தாக்கும் மாவுப்பூச்சிகளை

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2012,02:27 IST

திருநெல்வேலி:மானூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி பயிரை தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண்மை உதவி இயக்குனர் யோசனை தெரிவித்துள்ளார்.மானூர் வட்டாரம் கங்கைகொண்டான் பகுதிகளில் தற்போது பயிர் செய்யப்பட்டுள்ள 70-80 நாள்கள் ஆன வயதான பருத்திப்பயிரில் மாவு பூச்சிகளின் தாக்குதல்

பரவலாக தென்படுகிறது. பருத்தி பயிரை தாக்கும் மாவுப்பூச்சிகள் பயிரின் இலையின் அடிப்பகுதி, தண்டு, காய் பகுதிகளில் திட்டு திட்டாக பஞ்சு போன்ற வெண்மை நிறத்தில் காணப்படும். தாக்கப்பட்ட பயிரில் எறும்புகளின் நடமாட்டம் இருக்கும். பாதிக்கப்பட்ட பயிரின் பஞ்சு போன்ற வெண்மை நிற திட்டுகளை கைகளால் தாக்கினால் மாவுப்பூச்சியில் இருந்து சென்னீர் வடியும். இப்பூச்சிகள் தொடர்ச்சியான வறண்ட சூழ்நிலையில் அதிகளவு இனப்பெருக்கம் செய்து பரவும் தன்மை கொண்டது.

தாக்கப்பட்ட பயிரின் இலைகளின் சாறினை இப்பூச்சிகள் உறிஞ்சி விடுவதால் இளம் இலைகள் சுருங்கி செடிகள் வாடி காய்ந்து விடும்.

மாவுப்பூச்சிகள் பூக்கள், இளம் காய்களையும் தாக்கி அதிக அளவு பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும்.இப்பூச்சிகளை கட்டுப்படுத்த மூன்றுமுறைகளை பயன்படுத்தலாம்.

1. புரொப்ன்னோபாஸ் 50 சி.சி.,- 2 மில்லி மருந்து,2. ஒரு லிட்டர் தண்ணீர் அல்லது இமிடாகுளோர்பிரிட் 0.6 மில்லிமருந்து,3.

ஒரு லிட்டர் தண்ணீர் அல்லலது அசபேட் 2 மில்லி மருந்துஇந்த மூன்று முறைகளில் ஏதாவது ஒருமுறையினை பயன்படுத்தி கைத்தெளிப்பான் மூலம் ஏக்கருக்கு 200 லிட்டர் மருந்துகலவையும் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு தெளிக்கும் போது ஒட்டும் திரவம் சாண்டோவிட் 1 லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சிமருந்து கலவையினை தனியாக வாளியில் தயாரித்து தெளிப்பானில் ஊற்ற வேண்டும்.

நேரடியாக தெளிப்பானில் பூச்சி மருந்தினை ஊற்றுதுதல் கூடாது.இதனால் பூச்சி மருந்து பயிரின் எல்லா பகுதியிலும் நன்கு பரவி முழுமையான பூச்சி கட்டுப்பாட்டினை கொடுக்கும். மருந்தினை காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கவேண்டும்.

தேவைப்பட்டால் 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறை மருந்து தெளித்து மாவுப்பூச்சியினை கட்டுப்படுத்தலாம்.

சாலை ஓரங்களில் காணப்படும் துத்திச்செடி, பார்த்தீனியம் போன்ற களை செடிகளில் இப்பூச்சிகள் காணப்படுவதால் அக்களைச் செடிகளை பிடுங்கி அழித்துவிட வேண்டும். வயல் வரப்புகள் புல், பூண்டுகள் இன்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட முறையை கையாண்டு பருத்தி பயினை மாவுப்பூச்சி தாக்குதலில் இருந்து காப்பாற்றிக்கொள்ளுமாறு மானூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கொடைக்கானலில் பருவமழை விவசாய பணிகள் துவக்கம்

பதிவு செய்த நாள் : ஜூன் 10,2012,22:36 IST

கொடைக்கானல்:கொடைக்கானலில் தென்மேற்கு பருவமழை துவங்கியதையடுத்து,விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளது.மலைப்பகுதியில் பருவமழையை மட்டும் நம்பி மலைக்காய்கறிகள் 10 ஆயிரம் எக்டேரில் பயிரிடப்படுகிறது.

மருத்துவ குணம், தரமான விளைச்சல் என்பதால், இக்காய்களுக்கு எப்பொழுதும் வெளிமார்க்கெட்டில் நல்ல மவுசு உண்டு.உருளை, காரட், பூண்டு உள்ளிட்டவை கொடைக்கானலில் இருந்து வடமாநிலங்கள், வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

சில ஆண்டுகளாக எதிர்பார்த்த மழையின்மை, கூலியாட்கள் பற்றாக்குறை, பிளாட்டுகளாக மாறிய விளை நிலங்களால், ஆண்டுக்கு ஒரு டன் வரை காய்கறி மகசூல் குறைந்தாக தோட்டக்கலை துறையினர் தெரிவித்தனர்.

இந்தாண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை 400 மி.மீ., (சென்ற ஆண்டு 600)மழை பெய்துள்ளது.சில தினங்களுக்கு முன்பு பெய்த தென்மேற்கு பருவமழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.விவசாய சங்கத்தலைவர் பரமசிவம் கூறியதாவது: தென்மேற்கு பருவமழை துவங்கியதையடுத்து, காய்கறிகள் பயிரிடுவதற்காக, விளைநிலங்களை தயார்படுத்தும் பணியை துவக்கியுள்ளோம்.

இந்தாண்டு எதிர்பார்த்த பருவமழை இருந்தால், காய்கறி உற்பத்தி இருமடங்காக அதிகரிக்கும் வாய்ப்புள்ளது, என்றார்.

---

தினத் தந்தி

## *சர்வதேச சந்தையில் தேவைப்பாடு குறைந்ததால் காபி ஏற்றுமதி சரிவு*

*பி கே கிருஷ்ணகுமார் ,கொச்சி*

*சர்வதேச சந்தையில் தேவைப்பாடு குறைந்ததால், 2012 ஜனவரி முதல் ஜூன் 5–ந் தேதி வரையிலான காலத்தில் காபி ஏற்றுமதி 680 டன் சரிவடைந்து 1.79 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.*

*திடீர் பின்னடைவு*

*2011–ஆம் ஆண்டில் காபி ஏற்றுமதி சிறப்பாக இருந்தது. நடப்பாண்டு ஏப்ரல் மாதம்*

*வரையிலும் கூட ஏற்றுமதியில் ஓரளவு விறுவிறுப்பு காணப்பட்டது. ஆனால் மே மாதத்தில் ஏற்பட்ட திடீர் பின்னடைவு காரணமாக காபி ஏற்றுமதி கடுமையாக குறைந்தது. இதனால் நடப்பாண்டில் இதுவரை ஒட்டுமொத்த அளவில் ஏற்றுமதி கணிசமாக குறைந்துள்ளது. இதே காலத்தில் மதிப்பின் அடிப்படையிலும் ஏற்றுமதி 2.50 கோடி டாலர் குறைந்து 53.10 கோடி டாலராக உள்ளது.*

*காபி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் ரமேஷ் ராஜா இது குறித்து கூறுகையில், "ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நெருக்கடியால் இனி வரும் மாதங்களிலும் காபி ஏற்றுமதி அதிகரிப்பதற்கான வாய்ப்பு இல்லை. அராபிகா காபி விலை குறைந்திருந்தாலும், ரோபஸ்டா காபி விலை அதிகமாகவே உள்ளது. ரோபஸ்டா உற்பத்தியில் முன்னிலையில் உள்ள வியட்நாம் அதிக அளவில் ஏற்றுமதி செய்து வந்தாலும் சர்வதேச சந்தையில் இதன் விலை குறையவில்லை. தேவைப்பாடு நன்றாக உள்ளதே இதற்கு காரணம்" என்று தெரிவித்தார். வியட்நாமில் காபி உற்பத்தி 20 லட்சம் மூட்டைகள் (ஒரு மூட்டை 60 கிலோ) உயர்ந்து 2.20 கோடி மூட்டைகளாக உயர்ந்துள்ளது. இந்தோனேஷியாவில் உற்பத்தி 30 சதவீதம் உயர்ந்து 80 லட்சம் மூட்டைகளாக அதிகரித்துள்ளது.*

*2 லட்சம் டன்*

*இந்தியாவில் 2 லட்சம் டன் ரோபஸ்டா காபி உற்பத்தியாகி உள்ளது என கர்நாடக மாநில பெருந்தோட்ட விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது, காபி வாரியத்தின் எதிர்பார்ப்பான 2.17 லட்சம் டன்னைக் காட்டிலும் குறைவாகும். ரோபஸ்டா உற்பத்தி நிச்சயம் சரிவடைந்துள்ளது என காபி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

## தேயிலை தூள் விலை வீழ்ச்சி

*குன்னூர், ஜூன்.11–*

*குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும் 74 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.*

தேயிலை தொழிற்சாலைகள்

*நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுமார் 150 சிறு தேயிலை தொழிற்சாலைகளில் மற்றும் கம்பெனி எஸ்டேட் தேயிலை தொழிற்சாலை களிலும் தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த தொழிற்சாலைகளில் சி.டி.சி. மற்றும் ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ் வாறு உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் வாரந்தோறும் வியாழன், வெள்ளி 2 நாட்கள் நடைபெறும் தேயிலை ஏலத்தில் விற்பனை செய்யப் படுகிறது.*

*வர்த்தகர்கள்*

*தேயிலை தூள் ஏலம் குன்னூர் தேயிலை வர்த்தகர் கழகத்தின் மூலம் நடத்தப்படு கிறது.*

விற்பனை எண் 23–க்கான ஏலம் கடந்த 7, 8 ஆகிய தேதிகளில் நடை பெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 79 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது.

இதில் 9 லட்சத்து 9 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 70 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருந்தது.

74 சதவீதம்

ஏலத்தில் 74 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 165 ரூபாய் என்று ஏலம் சென்றது.

ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலை யாக 230 ரூபாய் இருந்தது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 67 ரூபாயில் இருந்து 70 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூள்

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 70 ரூபாயில் இருந்து 76 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 24–க்கான ஏலம் வருகிற 14, 15 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 58 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## மரவியல் பூங்காவில் மலர்செடி நடவு பணி



ஊட்டி படகு இல்லம் பகுதியில் அமைந்து உள்ள மரவியல் பூங்காவில் மலர்செடிகள் நடவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்.

*ஊட்டி, ஜூன்.11–*

*ஊட்டியில் தற்போது கோடை சீசன் முடிந்து உள்ள நிலையில் 2–வது சீசனுக்கான பணிகள் பூங்காக்களில் தொடங்கப்பட்டு உள்ளது. ஊட்டி படகு இல்லம் பகுதி யில் அமைந்துள்ள மரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

*மேலும் 2–வது சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஊட்டி மரவியல் பூங்காவில் உள்ள நடைபாதை ஓரங்களில் அகப்பன்தஸ் மற்றும் ஹைட்ரேஞ்சியா மலர்கள் நடவு செய்யப்பட்டு வருகின் றன. இந்த மலர் செடிகளில் பூக்கும் வண்ண மலர்கள் வெகுவாக சுற்றுலா பயணி களை கவரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.*

---



ஏல மார்க்கெட்டில் குவிந்த ரஸ்தாளி வாழைத்தார்கள்.